# தேயிலை சிறு நிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை சிறு நிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

ரூபா 29,264,400 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக தேய்விடப்பட்ட நிலையில் தற்போது தலைமை அலுவலகம், காலி, மாத்தறை, இரத்தினபுரி, நுவரெலியா, ஊவா மற்றும் களுத்துறை பிராந்திய அலுவலகங்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள் இ.க.நி. இல. 18 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா, களுத்துறை, நுவரெலியா, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் காலி, பிராந்திய அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 277,674 தொகையான இருப்புக்கள் களஞ்சியங்களிலுள்ள பழுதடைந்த, காலாவதியான, பயன்படுத்த முடியாத மற்றும் குறைவுகள் என்பவற்றினை கருத்திற்கொள்ளாது புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான சர்வதேச நிதியத்திடமிருந்து (IFARD) அதிகாரசபையினால் நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்டு

நுவரெலியா அலுவலகத்திலுள்ள ரூபா 388,420 பெறுமதியான மோட்டார் சைக்கிலும் கணனியும் மானியமாக காட்டப்படுவதற்குப் பதிலாக தவறுதலாக செலுத்தவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் அழைப்பு வைப்புக்களிலிருந்து பெறவேண்டியதாக ரூபா 587,780 தொகையான வட்டிகள் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் வங்கி உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அது கிடைத்திருந்தது.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் காசுப் புத்தகத்தில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 160,909 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) பட்டோலைகளின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை சக்தி நிதியத்திலிருந்து பெறவேண்டிய கடன்பட்டோர் ரூபா 75,213,449 தொகையான அதேநேரம் தேயிலை சக்தி நிதியத்தின் கணக்குகளின் படி அது ரூபா 74,048,540 ஆக காணப்பட்டது. மேற்படி இரண்டு கணக்குகளிற்கிடையே அவதானிக்கப்பட்ட ரூபா 1,164,913 வேறுபாடு மீளாய்வாண்டில் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 81,139,404 தொகையான கடன்பட்டோர் (தலைமை அலுவலகம்) 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

தேயிலை சக்தி நிதியத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 75,213,449 மீதியினை பதிவழிப்பதற்கு திறைசேரியிடமிருந்து இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றும் கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 5,916,590 தொகைக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபையின் தலைவரினால் அவரது பதிலளிப்புக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) முறையே ரூபா 4,514,317 மற்றும் ரூபா 430,557 கூட்டுமொத்தத் தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் (பிராந்திய அலுவலகங்கள்) 5 வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட்டு/தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹந்தான பயிற்சி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 12,968,728 தொகையான முற்பணம் நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

புத்தகங்களிலிருந்து முற்பணத்தினை பதிவழிப்பதற்கு பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்திற்காக காத்திருப்பதாக அதிகாரசபையின் தலைவரினால் அவரது பதலளிப்புக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

(ஈ) மீள் பட்டியலிடப்பட்ட ரூபா 9,166,678 வாகனக் கடன்கள் அறவிடப்படாது கடந்த 5 வருடத்திற்கும் மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 104(2) மற்றும் நி.பி. 110 | பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படாததுடன் இந்த நட்டங்கள் அறிக்கையிடுவதற்காக அதிகாரசபையினால் தனியான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 1645 மற்றும் நி.பி. 1646 | பிரமாணங்களின் பிரகாரம் அதிகாரசபையின் 26 வாகனங்களிற்கான நாளாந்த ஓட்டக் அட்டவணைகளும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| (i) 1978 திசெம்பர் 12 ஆந் திகதிய 842 ஆம் இலக்கம் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணனித் |

| | |
|---|---|
| ஆம் இலக்கம் | துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டி ருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 4.5 மில்லியன் தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 12.7 மில்லியன் தேறிய பற்றாக்குறையினை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் மேலும் ரூபா 8.3 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டியது. அபிவிருத்திச் செலவினங்கள் மற்றும் சம்பளங்கள் முறையே ரூபா 18.8 மில்லியன் மற்றும் ரூபா 10.0 மில்லியனால் அதிகரித்தமையே இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.2 அதிகாரசபையின் திரட்டிய நிதியம்**

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி அதிகாரசபைக்கு ஆரம்ப மூலதனமொன்று இல்லாதிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 212,472,868 தொகையான எல்லா மானியங்களும் ஏனைய செயற்திட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் திரட்டிய நிதியாக காட்டப்பட்டுள்ளது.

**3. செயலாற்றல் மீளாய்வு**

**3.1 தேயிலை உற்பத்திக்கு தேயிலை சிறு நிலஉரிமையாளர்களின் பங்களிப்பு**

கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி 328.37 மில்லியன் கிலோகிரேமாகக் காணப்பட்டதுடன் அதில் தேயிலை சிறுதோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு 229.94 மில்லியன் கிலேகிராம் அல்லது 70% ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி 331.4 மில்லியன் கிலோகிரேமாகக் காணப்பட்டதுடன் அதில் தேயிலை சிறு நிலஉரிமையாளர்களின் பங்களிப்பு 230.13 மில்லியன் கிலேகிராம் அல்லது 69.44% ஆக காணப்பட்டது. அதன்படி மீளாய்வாண்டில் அதிகாரசபையின் பங்களிப்பு 0.56% ஆல் அதிகரித்திருந்தது.

## 3.2 தேயிலை நடுகை அபிவிருத்தி

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் உதவுதொகைகள், விரிவாக்கம் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 208 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான நடுகை அபிவிருத்திக் கிரயம் மற்றும் அபிவிருத்திக் கிரயத்தின் ஒரு ரூபாவிற்கான அமுலாக்கல் கிரயம் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்திக் கிரயம் ரூபா மில்லியன் | 183.8 | 208.3 | 185.7 | 189.2 | 208.0 |
| அமுலாக்கல் கிரயம் ரூபா மில்லியன் | 179.0 | 188.7 | 202.1 | 205.4 | 218.5 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ஒரு ரூபாவிற்கான அமுலாக்கல் கிரயம் ரூபாவில் | 0.97 | 0.91 | 1.08 | 1.08 | 1.04 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) உதவுதொகைகள் திட்டத்தின் கீழ் தேயிலை நடுகை

(i) தேசிய கொள்கையின் படி, உயர்ந்த விளைச்சலை பெற்றுக்கொள்வதற்காகவும் தேயிலை நிலங்களை நிலைபேறாக வைத்திருப்பதற்கும் ஆண்டுதோரும் 2,200 ஹெக்டேயர்களில் மீள்நடுகை செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபையின் அறிக்கைப் படி, மீளாய்வாண்டில் 772 ஹெக்டேயர்களில் மாத்திரம் மீள்நடுகை செய்யப்பட்டிருந்தது.

(ii) கேகாலை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 2010 ஆம் ஆண்டிலிருந்து புதிய தேயிலை நடுகை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இலக்கிடப்பட்ட பிரதேசத்தில் 56.76% பூரணப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கீட்டிலிருந்து உதவுதொகையாக ரூபா 1.186 மில்லியன் அல்லது 47.44% செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விரிவுபடுத்தல் மற்றும் ஆலோசனைச் சேவைகள்

---

(i) அதிகாரசபையின் அறிக்கைப்படி, விரிவாக்கல் சேவைகள் பதவியணியினர் 26,103 தனிப்பட்ட விரிவாக்கல் சேவைகளையும் 6,970 குழு நிகழ்ச்சிகளையும் மீளாய்வாண்டில் நடத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது முறையே 4.5% மற்றும் 2.57% குறைவாகும்.

(ii) மீளாய்வாண்டில் விரிவாக்கல் மற்றும் ஆலோசனைச் சேவைகளில் 175,849 விவசாயிகள் பங்குபற்றியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 16.39% ஆல் குறைவடைந்திருந்தது.

(iii) விரிவாக்கல் சேவைகள் தொடர்பில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் படி, விவசாயிகளிற்கான விரிவாக்கல் உத்தியோகத்தர் ஒருவரின் விகிதாசாரம் 1:1,000 ஆக இருக்கவேண்டும் எவ்வாறாயினும், அதிகாரசபையின் தகவல்களின் படி, விவசாயிகளிற்கான விரிவாக்கல் உத்தியோகத்தர் ஒருவரின் விகிதாசாரம் 1:2,650 ஆக காணப்பட்டது. ஆகவே தனிப்பட்ட ஒவ்வொருவரிடத்தும் குறைவான கவனமே செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் விரிவாக்கல் உத்தியோகத்தரிற்கான வெற்றிடங்கள் 16 ஆக இருந்தது.

(iv) அதிகாரசபையின் தகவல்களின் படி, மீளாய்வாண்டில் 5,275 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 80% செயன்முன்னேற்றமாகும்.

(இ) நிறுவக ரீதியான நாற்று மேடைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிக்கூற்றுக்களின் படி, முன்னைய ஆண்டின் ரூபா 236,206 இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 870,639 இலாபத்தினை 06 நாற்று மேடை வளர்ப்புச் செயற்பாடுகள் விளைவித்திருந்ததுடன் அது ரூபா 634,433 ஆல் செயற்பாட்டு விளைவுகளில் முன்னேற்றமொன்றை காட்டியது.

(ii) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 64,054 மற்றும் ரூபா 725,541 நட்டத்தினை திஸ்பனே நாற்றுமேடை ஈட்டியிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் அதிகாரசபையின் 06 நாற்று மேடைகளில் 158,535 எண்ணிக்கையான நாற்றுக்கள் இறந்திருந்ததுடன் அது மொத்தக் நாற்றுக்களில் 24% ஆகும். ரத்துன்கொட, ஹந்தான மற்றும் திஸ்பனே நாற்றுமேடைகளின் இறப்பு மீளாய்வாண்டில் அசாதரணமாக அதிகரித்திருந்ததுடன் அவை முறையே 30%, 27% மற்றும் 21% ஆகக் காணப்பட்டன. மோசமான காலநிலையே இதற்குக் காரணமென அதிகாரசபையின் தலைவரினால் அவரது பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) வர்த்தக ரீதியான நாற்றுமேடை வளர்ப்புகளை பதிவுசெய்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அதிகாரசபையின் தகவல்களின் படி, மீளாய்வாண்டில் அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களினால் 663 நாற்றுமேடை வளர்ப்பிடங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அவற்றில் 31 நாற்றுமேடை வளர்ப்பிடங்கள் மாத்திரம் நாற்றுக்களை விற்பனை செய்வதற்குப் பொருத்தமானவை என சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

(ii) களுத்துறை பிராந்திய அலுவலகத்தினால் 37 நாற்றுமேடை வளர்ப்பிடங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை (நாற்றுக்களை விற்பனை செய்வதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய) வெளிக்களப் பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை.

(iii) மாத்தறை மற்றும் கேகாலை பிராந்திய அலுவலகங்களினால் பதிவுசெய்யப்பட்டிருந்த மொத்த நாற்றுமேடை வளர்ப்பிடங்களில் முறையே 4.2 சதவீதம் மற்றும் 6.3 சதவீதம் வெளிக்களப் பரிசோதனை நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவடைந்திருந்தன.

(iv) மீளாய்வாண்டில் நுவரெலியா பிராந்திய அலுவலகத்தினால் எவ்விதப் பதிவுசெய்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) தேயிலை பசளை விநியோகம்

தேயிலைப் பசளை விநியோகக் கணக்கின் படி, மீளாய்வாண்டில் தேயிலை சிறு நிலவுடமையாளர்களிற்கு வழங்கப்பட்ட பசளையின் அளவு 67,735 கிலோகிராம்களாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 292,473 கிலோகிராம்கள் அல்லது 81% இனால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பசளை விநியோக நிலையங்களின் இலாபம்/நட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

| பசளை நிலையம் | ஆண்டிற்கான தேறிய இலாபம்/(நட்டம்) | | அதிகரிப்பு/(குறைவு) |
|---|---|---|---|
| | 2011 | 2010 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சரசவியுயன | (174,121) | 5,131 | (179,258) |
| பொரமதுல்ல | (132,161) | 7,803 | (139,964) |
| ஹிங்குள்ள | (269,247) | 13,235 | (282,482) |
| கம்பொல | 134,044 | (190,017) | 324,060 |
| கினிகத்ஹேன | - | (62,427) | (62,427) |
| பண்டாரவலை | (2,219) | 64,444 | (66,663) |

தலைவரின் கருத்துரையின் படி, தேசிய பசளை திட்டத்தினை தாபித்ததன் பின்னர் இத்தேயிலை பசளை நிலையங்கள் தொழிற்பட்டிருக்கவில்லை.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேகாலை பிராந்திய அலுவலகத்தின் ஹின்குல பசளை நிலையத்திலிருந்த 6,525 கி.கி. பசளை மீளாய்வாண்டில் பழுதடைந்தும் அழிவடைந்தும் இருந்தன.

(ii) மீளாய்வாண்டில் வாகனப் பதிவினைப் புதுப்பித்தல் தாமதமடைந்தமையால் தண்டப்பணமாக ரூபா 7,045 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் வளகன்துவ தோட்டத்திலுள்ள சுற்றறுலா விடுதி 10 ஆண்டுகளிற்கும் மேலாக பய்னபடுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், வளகன்துவ தோட்டத்திலுள்ள உரக் களஞ்சியமும் நீர் தாங்கியும் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக பய்னபடுத்தப்படாதிருந்தன.

(ii) வளகன்துவ தோட்டத்திலுள்ள மூன்று பதவியணியினர் விடுதிகள் நீண்டகாலமாக வெளித்தரப்பினரால் பிடித்துவைக்கப்பட்டிருந்தன.

## 3.5 ஏனைய நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8:3:9 ஆம் பந்திக்கு முரணாக 2011 ஆகஸ்ட் 11 முதல் வரிசை அமைச்சிற்கு வாகனமொன்று விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) 1992 இல் கேகாலை பிராந்திய அலுவலகத்திற்கு ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்திட்டத்தினால் ரூபா 800,000 பெறுமதியான கட்டிடம் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 1993 தொடக்கம் இக்கட்டிடம் கையேற்கப்பட்டு எவ்வித வாடகையும் செலுத்தப்படாது சப்ரகமுவ மாகாண சபையின் விவசாய அமைச்சரின் அலுவலகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | | | | |
| - சிரேஷ்ட மட்டம் | 03 | 02 | 01 | - |
| - மத்திய மட்டம் | 36 | 19 | 17 | - |
| - கனிஷ்ட மட்டம் | 44 | 33 | 11 | - |
| இரண்டாந்தர மட்டம் | 166 | 147 | 19 | - |
| மூன்றாந்தர மட்டம் | 127 | 168 | - | 41 |
| ஆரம்ப மட்டம் | 46 | 55 | - | 09 |
| மொத்தம் | 422 | 424 | 48 | 50 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிறைவேற்றுத் தரம் அடங்கலாக 48 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் நிறைவேற்றுத் தரமற்ற மட்டத்திலும் கனிஷ்ட மட்டத்திலும் 50 மேலதிக பதவியினர் காணப்பட்டனர். இருப்பினும், 2010 யூன் 29 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/08/5/070/1 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் கடிதத்தின் பிரகாரம் தற்போது சேவையாற்றி வருகின்ற 55 முகாமைத்துவ உதவியாளர்களும் 13 தொழிலாளர்களும் அவர்கள் சேவையிலுள்ள காலத்திற்காக தனிப்பட்ட முறையில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விரிவாக்கல், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்காக 03 பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் 11 உதவிப் பிராந்திய முகாமையாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

தலைவரின் கருத்துரையின் படி, சேவைப் பதிவியுயர்வகள் வழங்கப்படாமை மற்றும் விரிவாக்கல், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் உதவிப் பிராந்திய முகாமையாளர் பதவிகளிற்கு ஆட்சேர்த்தல் தொடர்பில் நீதிமன்ற வழக்குகள் காரணமாக பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் உதவிப் பிராந்திய முகாமையாளர் பதவிகளிற்கு ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பெறவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டியவை

(ஆ) இருப்புகள்

(இ) வங்கிக் கணக்கிணக்கங்கள்

(ஈ) உதவுதொகைகளின் கொடுப்பனவு

(உ) வாகனங்களின் பயன்பாடு